கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட / இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2011/2012 (2013)

**TLS 2203** தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

முதலாம் வினா உட்பட எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

LIBRARY
EASTERN UNIVERSITY
02 OCT 2013

1. பின்வரும் தொல்காப்பிய நூற்பாக்களிற்கான பொருளை உரையாசிரியர்களின் துணைகொண்டு விளக்குக.

அ. வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மரபினவே

ஆ. செப்பும் வினாவும் வழாஅலோம்பல்

இ. பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லினாகும் என்மனார் புலவர்

ஈ. ஒன்றன் படர்க்கை றடவூர்ந்த
குன்றிய லுகரத் திறுதியாகும்

உ. இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற்றியலும் தமக்கியல்பிலவே

(5x5= 25புள்ளிகள்)

2. வேற்றுமையின் வகைகளை எடுத்துக் கூறி இரண்டாம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை ஆகியவை எவ்வெப் பொருளில் வருமென எடுத்துக் கூறுக. (25 புள்ளிகள்)

3. பெயர்கள் விளியேற்கும் முறையை சொல்லதிகாரத்தினடிப்படையில் விளக்குக. (25 புள்ளிகள்)

4. உயர்திணைக்கும் அஃறிணைக்கும் உரியனவாக வரும் பெயர்ச்சொற்கள் பற்றித் தொல்காப்பியர் கூறுவனவற்றை உதாரணங்களுடன் விளக்குக. (25 புள்ளிகள்)

5. அ. இடைச் சொற்கள் எவ்வெப் பொருள்களில் வழங்கும். (10 புள்ளிகள்)

ஆ. 'ஏ' கார, 'உம்' இடைச் சொற்கள் பற்றித் தொல்காப்பியர் கூறுவனவற்றை ஆராய்க. (15 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு குறிப்புரை எழுதுக.

ஆ. பால் விகுதிகள்

ஆ. சுட்டுப் பெயரும் சுட்டுப் பெயர் வருமிடங்களும்.

இ. கால மயக்கம்

ஈ. பெயரெச்சமும் வினையெச்சமும் (12 ½ x 2=25பு